# வகுப்பு - 8 - புவியியல், 2. வானிலை மற்றும் காலநிலை

**பயிற்சி வினாக்கள்:**

1. புவியின் வளிமண்டலம் ______ நைட்ரஜன் மற்றும் ______ ஆக்சிஜன் அளவைக் கொண்டுள்ளது.

(1) 78% மற்றும் 21% (2) 22% மற்றும் 1%

(3) 21% மற்றும் 0.97% (4) 10% மற்றும் 20%

2. ______ ஒரு பகுதியின் சராசரி வானிலையைக் குறிப்பதாகும்.

(1) புவி (2) வளிமண்டலம்

(3) காலநிலை (4) சூரியன்

3. புவி பெறும் ஆற்றல் ______.

(1) நீரோட்டம் (2) மின்காந்த அலைகள்

(3) அலைகள் (4) வெப்பம்

4. கீழ்க்கண்டவற்றில் எவை சம அளவு மழை உள்ள இடங்களை இணைக்கும் கோடு ஆகும்.

(1) சம வெப்பக்கோடு (2) சமசூரிய வெளிச்சக்கோடு

(3) சம காற்றழுத்தக்கோடு (4) சம மழையளவுக்கோடு

5. ______ என்ற கருவி ஈரப்பதத்தை அளக்கப் பயன்படுகிறது.

(1) காற்றுமானி (2) அழுத்தமானி

(3) ஈரநிலைமானி (4) வெப்பமானி

6. "Climate" என்ற சொல் கிளைமா என்ற பண்டைய ______ மொழியில் இருந்து பெறப்பட்டதாகும்.

(1) கிரேக்க (2) ரஷ்ய (3) லத்தீன் (4) ஜெர்மனி

LIVEWORKSHEETS

7. சூரியக் கதிர் வீச்சுகளிலிருந்து பெறப்படும் வெப்ப ஆற்றல் ______ வழிமுறைகளில் புவியை வந்தடைகிறது

(1) இரண்டு (2) மூன்று (3) நான்கு (4) ஐந்து

8. கீழ்க்கண்டவற்றுள் எது வானிலை மற்றும் காலநிலையைத் தீர்மானிக்கும் கூறு இல்லை?

(1) மழை (2) காற்று (3) மண் (4) வெப்பம்

9. அதிக காற்றழுத்த மண்டலம் ______ என்ற எழுத்தால் வானிலை வரைபடத்தில் குறிக்கப்படுகிறது.

(1) H (2) L (3) P (4) S

10. பொருத்துக.

1. நைட்ரஜன் - அ. காலநிலை பற்றிய அறிவியல்
2. வளியியல் - ஆ. வெப்ப மண்டலம்
3. காலநிலையியல் - இ. வானிலை பற்றிய அறிவியல்
4. அயன மண்டலம் - ஈ. சம மழையளவுக் கோடு
5. ஐசோஹைட்ஸ் - உ. 78%

(1) 1-ஈ, 2-இ, 3-அ, 4-உ, 5- ஆ (2) 1-உ, 2-இ, 3-அ, 4-ஆ, 5-ஈ

(3) 1-ஈ, 2-உ, 3-அ, 4-இ, 5-ஆ (4) 1-உ, 2-இ 3-ஆ 4-அ 5-ஈ

11. குறைந்த காற்றழுத்த மண்டலம் ______ என்ற எழுத்தால் வானிலை வரைபடத்தில் குறிக்கப்படுகிறது.

(1) R (2) L (3) S (4) P

12. கடக ரேகைக்கும், மகர ரேகைக்கும் இடைப்பட்ட பகுதி ______

(1) வெப்பமண்டலம் (2) மித வெப்பமண்டலம்

(3) வட துருவம் (4) தென் துருவம்

LIVEWORKSHEETS

13. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. காலநிலை | - | அ. புயலின் அமைவிடத்தையும், அது நகரும் திசையையும் அறிந்து கொள்வது |
| 2. ஐசோநி∴ப் | - | ஆ. சூறாவளி |
| 3. ஈரநிலைமானி | - | இ. சம பனிஅளவுக் கோடு |
| 4. ரேடார் | - | ஈ. நீண்ட கால மாற்றங்கள் |
| 5. தாழ்வு அழுத்த மண்டலம் | - | உ. ஈரப்பதம் |

(1) 1-ஆ 2-இ 3-ஈ 4-உ 5-அ
(2) 1-இ 2-ஈ 3-உ 4-அ 5-ஆ
(3) 1-ஈ 2-இ 3-உ 4-அ 5-ஆ
(4) 1-ஆ 2-இ 3-உ 4-அ 5-ஈ

14. காலநிலை என்பது வானிலை கூறுகளின் சராசரியை எத்தனை வருடத்திற்கு கணக்கிடுவது?

(1) 33 (2) 32 (3) 30 (4) 35

15 வெப்பநிலையானது 0 மீட்டர் கடல் மட்டத்திலிருந்து, ஒவ்வொரு 1000 மீட்டர் உயரத்திற்கும் _______ என்ற அளவில் குறைந்து கொண்டே செல்கிறது.

(1) 7.5°C (2) 6.5°C (3) 73.3°C (4) 65.5°C

16. ஆண்டு முழுவதும் ஒரே திசையை நோக்கி வீசும் காற்றுகள் _______ காற்றுகள் எனப்படும்.

(1) பருவக்காற்று
(2) தலக்காற்று
(3) வெப்பக்காற்று
(4) கோள்காற்று

17. ஒருநாள் அல்லது ஆண்டின் குறுகிய காலத்தில் குறிப்பிட்ட நேரத்தில் ஒரு பகுதியில் வீசும் காற்று _______.

(1) கோள்காற்று
(2) தலக்காற்று
(3) பருவக்கால காற்று
(4) குளிர்காற்று

18. உலகின் மிக அதிகபட்சக் காற்றழுத்தம் எந்த இடத்தில் பதிவானது?

LIVEWORKSHEETS

(1) குவாம் (2) அகாட் (3) ஜப்பான் (4) சவுதி

19. புவியின் பூமத்திய ரேகையைச் சுற்றியுள்ள பகுதிகளில் சூரியக்கதிர்கள் எவ்வாறு விழுகிறது?

(1) செங்குத்தாக (2) சாய்வாக

(3) கிடைமட்டமாக (4) எதுவுமில்லை

20. பின்வருவனவற்றில் எது வெப்பநிலையின் அலகு அன்று?

(1) பாரன்ஹீட் (2) கிலோகிராம்

(3) செல்சியஸ் (4) கெல்வின்

21. ஓர் இடத்தில் 24 மணி நேரத்திற்குள் நிலவும் அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலைக்கு இடையேயுள்ள சராசரி ______.

(1) வெப்பநிலை வீச்சு (2) வெப்ப வியாப்தி

(3) தினசரி வெப்பநிலை (4) எதுவுமில்லை

22. தவறான இணையைக் கண்டறி.

(1) ஆர்டிக் வட்டம் - (66° 30′வ வடக்கு

(2) கடக ரேகை - 23° 30′ தெற்கு

(3) நிலநடுக்கோடு - 0°

(4) மகர ரேகை - 28° 40′ தெற்கு

23. கடக ரேகைக்கும் ஆர்டிக் வட்டத்திற்கும் இடைப்பட்ட பகுதி ______.

(1) அயன மண்டலம் (2) குளிர்மண்டலம்

(3) மித வெப்பமண்டலம் (4) வெப்பமண்டலம்

24. புவியில் இதுவரை பதிவான குறைந்தபட்ச வெப்பநிலை ______.

(1) -20 .5 ºF (2) 0 ºF (3) -128.6 ºF (4) 500 ºF0

LIVEWORKSHEETS

25. புவியின் மேற்பரப்பில் குறிப்பிட்ட பகுதியிலுள்ள காற்றின் எடையே ______ எனப்படும்.

(1) வெப்பநிலை (2) வளிமண்டல அழுத்தம்

(3) வானிலை (4) காற்றின் சராசரி

26. கடல் மட்டத்திலுள்ள நிலையான காற்றழுத்தத்தின் அளவு ______ மில்லிபார்.

(1) 220.25 (2) 1013.25 (3) 3101 (4) 434.75

27. பூமியிலுள்ள எல்லாப் பகுதிகளிலும் காற்றழுத்தத்தின் அளவு ______ கிலோ / ச.செ.மீ ஆகும்.

(1) 1.04 (2) 1.03 (3) 1.01 (4) எதுவுமில்லை

28. காற்றின் வேகத்தை அளவிடப் பயன்படும் கருவி ______.

(1) ஹைக்ரோ மீட்டர் (2) கிளைமோ

(3) ஸ்டீவன்சன் திரை வெப்பமானி (4) பியோபோர்டு

29. பின்வரும் பகுதிகளுள் பூமியில் குறைந்த காற்று வீசும் பகுதி எது?

(1) அமெரிக்கா (2) மலேசியா (3) கேரளா (4) ஜப்பான்

30. புவியில் இதுவரை பதிவான மிக அதிகபட்ச வெப்பநிலை 56.7 ºC ஆகும். இது எந்த ஆண்டு? எந்த நாளில்? எங்குப் பதிவானது?

(1) 1983, ஜூலை 10, ரஷ்யா (2) 1913, ஜூலை 10, கலிபோர்னியா

(3) 1923, ஜூலை 25, சுமத்ரா (4) 1956, ஜூலை 21, வோஸ்டக்

31. வளிமண்டலம், புவிக் கதிர்வீச்சால் வெளியேறும் வெப்பத்தால், நாள்தோறும் எந்த நேரத்தில் அதிக வெப்பமடைகிறது?

(1) காலை 10 மணி முதல் பிற்பகல் 12 மணி வரை

(2) மாலை 4 மணி முதல் மாலை 6 மணி வரை

(3) பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணி வரை

LIVEWORKSHEETS

(4) முற்பகல் 8 மணி முதல் முற்பகல் 10 மணி வரை

32. இன்று திருப்பூரில் பதிவான அதிகபட்ச வெப்பநிலை 87 ºF மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 73 ºF எனில் வெப்பநிலை வீச்சு ______.

(1) 70 ºF (2) 80 ºF (3) 160 ºF (4) 14 ºF

33. துருவ மண்டலம் என்பது ______.

(1) நிலநடுக்கோட்டிற்கும் மகரரேகைக்கும் இடைப்பட்ட பகுதி.

(2) ஆர்டிக் வட்டத்திற்கும் கடகரேகைக்கும் இடைப்பட்ட பகுதி.

(3) தெற்கு அண்டார்டிக் வட்டத்திற்கும், வடக்கு ஆர்டிக் வட்டத்திற்கும் இடைப்பட்ட பகுதி.

(4) மகர ரேகைக்கும், அண்டார்டிக் வட்டத்திற்கும் இடைப்பட்ட பகுதி.

34. சரியான இணையைக் காண்க.

(1) நைட்ரஜன் - 50% (2) ஆக்சிஜன் - 10%

(3) ஆர்கான் - 0.97% (4) கார்பன் டை ஆக்சைடு - 20%

35. "கிளைமோ" என்பதன் தமிழாக்கம் ______.

(1) காலநிலை (2) நேர்க்கோணம்

(3) வானிலை (4) சாய்வுக் கோணம்

LIVEWORKSHEETS